4. அறிவிப்பு

பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் இராஜஸ்தான் சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. On behalf of Members of the Tamil Nadu Legislative Assembly and my own behalf, I extend a warm and hearty welcome to Shri Deependra Singh Shekhawat, Hon'ble Speaker, Rajasthan Legislative Assembly (Thumping of desks) who is now witnessing the proceedings of the Assembly from the Speaker's Gallery.

2. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரையோரமுள்ள மீன்களைப் பிடிப்பதற்கு அனுமதியளித்து கடற்கரை மீனவர்களுக்கு பயிற்சியும் அரசுமூலம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடற்கரை மீனவர்கள் அவ்வாறு மீன் பிடிப்பதற்கு அரசு அதிகாரிகள் கெடுபிடி செய்கின்றார்கள். மீனவர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி மீனவர்களுக்குப் பயிற்சி கொடுத்தவாறு வலைமூலம் மீன் பிடிப்பதற்கு உதவி செய்திட ஏதேனும் திருத்தங்கள் கொண்டு வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே சபையில் இந்தக் கேள்வியை முன்பு கேட்டிருந்தார்கள். நான் அதற்குப் பதிலளித்து இருந்தேன். அந்தப் பகுதியிலே மீனவர்களில் ஒரு தரப்பு வலையை போடுவதற்கும், மற்ற தரப்பு மீன் பிடிப்பதற்கு அந்த வலையைப் போடக் கூடாது என்றும் பிரச்சினையில் இருக்கின்றார்கள். அதற்கு